மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.162/2016</u>

2026ம் ஆண்டு ஏப்ரல் 01ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ருக்குமணி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>01.04.2026 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கை எனது கணவர் பாலுசாமி என்பவர் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். இந்த வழக்கை எனது கணவர் 21.07.2016 தேதியில் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை எனது கணவர் நீதிமன்ற ஆணையரை அழைத்துச் சென்று காண்பித்தாரா என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் தாவா தடத்தை பார்வையிட்டு அது சம்பந்தமாக அறிக்கை மற்றும் வரைபடங்களை தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் நீதிமன்ற ஆணையர் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடங்கள் என்றால் அது எனக்கு தெரியவில்லை.

2. மேற்படி ஆவணங்கள் கடந்த 08.12.2017 தேதியில் இடைக்கால மனு எண். 518/2017 என்ற மனுவில் எங்கள் தரப்பில் நீ.ம.சா.ஆ.1

மற்றும் நீ.ம.சா.ஆ.2 ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை நீ.ம.சா.ஆ.3 மற்றும் நீ.ம.சா.ஆ.4 ஆவணங்களாக தற்போது குறியீடு செய்து கொள்வதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். கடந்த 27.09.2016 தேதியில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் ஆகியவை நீ.ம.சா.ஆ.3 மற்றும் நீ.ம.சா.ஆ.4 ஆவணங்களாக குறியீடு செய்யப்படுகிறது.

3. தாவா சொத்துக்கள் உட்பட பூர்வீக சொத்துக்கள் குறித்த விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 05.03.1953 தேதியில் ஒரு நாச்சிமுத்து கவுண்டர் வகையறாவினர் பாகப்பிரிவினை செய்து கொண்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி நாச்சிமுத்து கவுண்டர் என்பவருக்கு யார் யார் வாரிசுகள் என்றால் முத்துசாமி கவுண்டர், நாச்சப்ப கவுண்டர் மற்றும் பழனிச்சாமி கவுண்டர் ஆகியோர்கள் வாரிசுகள்.

4. சாமாத்தாள் என்பவர் சுப்பராய கவுண்டர் என்பவரின் மனைவியா என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி சாமாத்தாள் என்பவருக்கு தங்கராஜ் மற்றும் பாலாமணி ஆகியோர்கள் வாரிசுகளா என்றால் ஆமாம். தங்கராஜ் என்பவரின் மனைவி பெயர் புஷ்பராணி என்றால் ஆமாம். இந்த வழக்கில் தங்கராஜின் மனைவி புஷ்பாத்தாள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது. தங்கராஜ் என்பவருக்கு ஒரே மகன் அவர் பெயர் தற்போது ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் ஜெயக்குமார் என்பவரை நான் 4ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளோம் என்றால் அது எனக்கு தெரியாது.

எனக்கு தற்போது 65 வயது ஆகிறது. எனது முதல் விசாரணை நிருபண வாக்குமூலத்தில் எனது வயது 63 என்று சொல்லி உள்ளேனா என்றால் ஆமாம்.

5. 1992 ஆம் வருடத்திய பாகப்பிரிவினை ஆவணத்தின் நகலை வா.சா.ஆ.1 ஆவணமாக நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் 13 அடி அகலம் உள்ள கிழமேல் தடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது ஆனால் எனது திருமணத்திலிருந்து நான் 24–1/2 அடித்தடத்தில் தான் சென்று வந்து கொண்டிருக்கிறேன். ரீசர்வே எந்த வருடம் செய்யப்பட்டது என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை.

6. ரீசர்வே சம்பந்தமாக எனக்கோ என் கணவருக்கோ வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து அறிவிப்புகள் ஏதேனும் வந்ததா என்றால் அது எனக்கு தெரியவில்லை. ரீசர்வே சம்பந்தமாக நில அளவையர் 1984 மற்றும் 1985 ஆண்டுகளில் ஏதேனும் அளவீடுகள் செய்தார்களா என்றால் செய்தார்கள் எந்த அலுவலகத்தைச் சேர்ந்த சர்வேயர் வந்து அளவீடு செய்தார் என்றால் பொத்திபாளையத்தை சேர்ந்த சர்வேயர் வந்து அளவீடு செய்தார்.

7. நிலவரி திட்ட அலுவலகம் என்ற அலுவலகம் திருப்பூர் சாலையில் செயல்பட்டு வந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த அலுவலகத்தில் இருந்து வந்த நிலவரி திட்ட சர்வேயர் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்த போது வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களை தாக்கல் செய்யாமல் தற்போது விசாரணையின் போது தான் தாக்கல்

செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை 09.08.2025 தேதியில் தான் நான் நகல் எடுத்துள்ளேன் என்றால் ஆமாம்.

(ஆவணங்கள் பார்வையிட வேண்டுமென்ற பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.04.01 18:05:04 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்